DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா. 10

Prosecution witness
(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திருமதி. எஸ். உமாதேவி | Caste: | |
| Father's Name: | வி.சுந்தர் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர், |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 36 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.12.2025.

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விழுப்புரம் மாவட்ட போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் காவல் காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2023 முதல் 11.12.2024 வரை இராமேஸ்வரம் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கடந்த 03.04.2024 ம் தேதி அன்று இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய கு.எண். 73/2024 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC and sec 3(2)(va) of SC/ST (POA) Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலன் விசாரணை செய்ய காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 10/SJ&HR/RMD/2024, Dated: 03.04.2024 உத்தரவின் மூலம் நியமித்து உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.6**. நான் அன்றே எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 12:21:18 +0530

இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரில் சக்திவேல் என்பவர் கட்டிக்கொண்டிருந்த வீட்டின் மேற்கே வடக்கிலிருந்து தெற்கே செல்லும் தார் ரோட்டில் சாட்சிகள் சோனைமுத்து மற்றும் கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்று அவர்களை அன்றைய தினமே விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ.7.** அன்றைய தினமே காலை 7.00 மணியளவில் சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கத்தியை சாட்சிகள் சோனைமுத்து மற்றும் கணேசன் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அதே இடத்தில் கைப்பற்றினேன். நான் தயார் செய்த அத்தாட்சி **அ.சா.ஆ.8**. அதே தினம் வழக்கின் புகார்தாரரான சிவா மற்றும் சம்பவ சாட்சிகள் தினேஷ், தமிழரசி, பிரியங்கா, வேலம்மாள், ரவிகணேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் வழக்கின் எதிரிகளான விஜய் மற்றும் விஜயசங்கர் ஆகியோரை இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகர் தெற்கு பக்கம் அமைந்துள்ள சவுக்கு காட்டில் வைத்து கைது செய்து 11.30 மணியளவில் நிலையம் அழைத்து வந்து பாரா வசம் ஒப்புவித்து பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே புகார்தாரர் சிவா மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்குமாறு இராமேஸ்வரம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 15.05.2024 ம் தேதி புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வட்டாட்சியர் வழங்கினார். அவர் வழங்கிய சாதி குறித்த அறிக்கை **அ.சா.ஆ.9.** வட்டாட்சியர் தனது அறிக்கையில் புகார்தாரர் சிவா பட்டியல் இனத்தை சேர்ந்த அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் எதிரிகள் மூவரும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 12:21:27 +0530

பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும் வழங்கினார். 21.05.2024 ம் தேதி காலை 9.00 மணியளவில் வழக்கின் எதிரியான நம்புவேல் என்பவரை இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் வைத்து கைது செய்து 09.30 மணியளவில் நிலையம் அழைத்து வந்து பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 27.05.2024 ம் தேதி புகார்தாரருக்கு காயச்சான்று பெறப்பட்டது. 28.05.2024 ம் தேதி சாட்சிகள் டாக்டர் ரமேஷ்பாபு, வட்டாட்சியர் வரதராஜ் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் நேரமும் இருட்டான இடம், இருட்டான நேரம் என்றால் சரிதான். நான் தயார் செய்த வரைபடத்தில் சம்பவ இடத்தில் மின் விளக்குடன் கூடிய மின்கம்பங்கள் இருந்ததாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று எத்தனை நாட்கள் அல்லது நேரம் கழித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்ய பிறப்பித்த உத்தரவு கிடைத்தது என்றால் ஒரு மணி நேரத்தில். வழக்கில் நான் கைப்பற்றியதாக சொல்லும் கத்தியை தென்வடல் ரோட்டிற்கு எந்த திசையில் கைப்பற்றினேன் என்றால் கிழக்கே. இந்த வழக்கில் நான் தயார் செய்த வரைபடத்திலோ, பார்வை மகசரிலோ சம்பவ இடத்தில் கத்தி கிடந்ததாக காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு ஆவணங்களில் எந்த ஆவணத்தில் காட்டியுள்ளேன் என்றால் இரண்டு ஆவணங்களிலும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 12:21:32 +0530

காட்டியுள்ளேன். பார்வை மகசர் தயார் செய்த பிறகு எவ்வளவு நேரம் கழித்து அத்தாட்சி தயார் செய்தேன் என்றால் பார்வை மகசர் தயாரித்த உடனே அத்தாட்சி தயார் செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளரை விசாரணை செய்ததில் இருந்து அவருக்கு சம்பவம் குறித்து இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததாக எனக்கு தெரியவந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் காயம்பட்ட சிவாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரித்தபோது அவர் சிவாவுக்கு உடலில் எந்தெந்த இடங்களில் எத்தனை காயங்கள் இருந்தன என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சிவாவுக்கு ஏற்பட்ட காயங்களின் நீளம், அகலம், ஆழம் குறித்து மருத்துவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் கத்தி இரத்தத்துடன் இருந்ததா அல்லது இரத்தமின்றி இருந்ததா என்றால் இரத்தமின்றி இருந்தது. வழக்கில் காயம்பட்ட சிவா சம்பவத்தின்போது அணிந்திருந்த ஆடைகளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அடையாளம் தெரியாத நபர்களால் ஏற்பட்ட காயத்தை வைத்து அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இருந்த முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு 2 வது எதிரி மீது கொடுத்த பொய்யான புகாரை நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 12:21:36 +0530

என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| Tmt. Deepa,<br>Head Clerk,<br>Principal District Court,<br>Viluppuram. | Thiru.A. Mohamed Yasin,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

| | | |
|---|---|---|
| Co coordinator<br>Remote site | Deponent | Co coordinator<br>Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 12:21:40 +0530